# லட்சியத்தில் உள்ள முரண்பாடு

அன்பு நண்பர்களே,

பூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்களின் படைப்புகளை நாம் படிக்கும்போது, நமது பயணத்தின் ஆரம்பம் முதலே நமது லட்சியத்தை நிர்ணயித்துக் கொள்ளும்படி அவர் நம்மை வேண்டிக் கேட்டுக்கொள்வதை ஏராளமான சந்தர்ப்பங்களில் நாம் காண்கிறோம். இந்த உணர்வுபூர்வ மனோபாவத்தினை பல்வேறு விதங்களில் மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார். இருப்பினும், அதி உயர்வான நிலை உட்பட எந்த ஒரு நிலைக்கான ஆசையும் நம் இதயத்தில் இருக்குமேயானால், அந்த ஆசையின் இருப்பே நம்மை வழிதவறச் செய்யும் என்பதை நாம் காண்கிறோம். உண்மையில், எது ஒன்றையும் அடைவதிலிருந்து இது நம்மைத் தடுத்துவிடும். ஆன்மீகத் துறையில், லட்சியத்தை அடைவதென்பது, “நான்” என்பது உருகிக் கரைவதுடன் நேர் விகிதத்தில் சம்பந்தப்பட்டுள்ளது. ஒரு ஆன்மீக நிலையை அல்லது உள்நிலையை அடைய நாம் ஏங்கும்போது, அந்த ஏக்கத்தின் பின்னணியில் இருப்பது “நான்” என்பதேயாகும்; அந்த “நான்” என்பதன் இருப்பு, நாம் ஏங்குகின்ற அந்த நிலைக்குள் நமது பிரவேசத்தைத் தடுத்து நிறுத்துகிறது. ஆகவே, எந்த ஒரு லட்சியமும் - அது அதி உயர்வானதோ, அல்லது இடைப்பட்ட ஒன்றோ - அது அடையப்பெறுவதற்கு, அந்த “நான்” என்பதே தடையாக இருக்கிறது. இதுவே **ஆன்மீக வாழ்க்கையின்** முதன்மையான முரண்பாடாகும்; நாம் முன்னேறிச் செல்வதற்கு இந்த முரண்பாடு சரிசெய்யப்பட வேண்டும்.

**வாழ்க்கை குறித்த பாபூஜியின் சொந்த அணுகுமுறையை ஆராய்வதன் மூலம் நாம் தொடங்கலாம். அவர் ஒரு லட்சியத்தை கொண்டிருந்தாரா?** சிறு வயதில், தனது தாயார் சம்பிரதாய முறையில் பூஜை செய்வதை தான் அடிக்கடி கவனித்திருப்பதாக அவர் எழுதுகிறார். ஆறு அல்லது ஏழு வயதில், தனக்கும் அதைக் கற்றுத் தரும்படி அவர் தாயாரிடம் கேட்டாராம். அவரது தாயார், சந்தன சாந்தினால் திலகம் தீட்டி அவரது நெற்றியை அலங்கரிப்பாராம்; பாபூஜியும் தனது அன்றைய பூஜையை தான் செய்துவிட்டதாக சந்தோஷமாக உணர்வாராம். சில வருடங்களுக்குப் பின்னர், உண்மைக்கான தாகத்தை அவர் உணரத் தொடங்கினார்; அது அவரை பகவத் கீதைக்கு இட்டுச் சென்றது. கடைசியில், அவர்களது குடும்ப புரோகிதர் “ராம ராம” என பாராயணம் செய்யும்படி அவருக்கு அறிவுரை வழங்கினார்; சிறிது காலம் அவர் பக்தியுடன் அதை செய்தார்; ஆயினும், அது அவரது இதயத்தை திருப்திப்படுத்தவில்லை. உண்மைக்கான அவரது தாகம், ஒரு நல்ல நாளன்று, லாலாஜி மகராஜிடம் அவரை அழைத்துச் சென்றது. முதல் பார்வையிலேயே, பாபூஜி வசீகரிக்கப்பட்டார். தனது சொந்த வீட்டில் இருப்பது போலவே உணர்ந்தார்.

தனது மாஸ்டரால் எந்த விதத்திலும் தான் நிறைவு செய்யப்படவேண்டும் என்று பாபூஜி ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை. இதயபூர்வமாக அவர் லாலாஜியை நேசித்த போதிலும், அவர் ஒருபோதும் ஆன்மீக முன்னேற்றத்தை நாடியதுமில்லை, தனது குருவின் அன்பிற்கும் பாசத்திற்கும் விருப்பப்பட்டதுமில்லை. தனது மாஸ்டரிடம் கொண்டிருந்த முழுமையான ஒருமுனைப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு என்னும் ஒரே ஒரு விஷயத்தால் மட்டுமே பாபூஜியின் வாழ்க்கை வரையறுக்கப்பட்டிருந்தது. **அவரது ஒரே கவனம் லாலாஜியின் மீதே நிலைத்திருந்தது; லாலாஜியின் திருவடிகளில், பரிபூரண சரணாகதி நிலையின் முன்னுதாரணமாக அவர் திகழ்ந்தார்; அது, முன்மாதிரி ஏதுமற்ற, அளவிட முடியாத முன்னேற்றத்தில் பரிணாமம் அடைந்தது.**

ஐக்கியம் அடைதலே சாத்தியமான அதி உயர் லட்சியம் என பெரும்பாலும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது; ஆனால் பாபூஜியின் வாழ்க்கை அதை நமக்கு வேறுவிதமாக வெளிப்படுத்துகிறது. எல்லா விதத்திலும் ஒருவரது குருவுடனான, பூரணமான ஒத்த தன்மை போன்ற, ஐக்கியம் அடைதலையும் தாண்டிய லட்சியங்கள் உள்ளதை நாம் காண்கிறோம்; அதற்கு மேலும், இன்னமும் செல்வது சாத்தியம் என்பதையும் நாம் காண்கிறோம். எல்லா விதத்திலும் முழுமையான ஒத்த தன்மைக்குப் பின்னர் வரும் நிலைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

இருப்பினும், தான் பெற்றுள்ள ஏராளமான தெய்வீகப் பரிசுகளுக்காக, பாபூஜி ஒருபோதும் ஏங்கியதில்லை. இந்த அருளாசிகளுக்காக அவர் ஒருபோதும் ஏங்கியதில்லை என்ற போதிலும், லாலாஜி அவர் மீது அருளிய ஒவ்வொரு நிலை மற்றும் உள்நிலையின் மீதும் முழுமையான ஆளுமை பெறும் அளவிற்கு, லாலாஜியின் மீதான அவரது மரியாதை அந்த அளவு முழுமையாக இருந்தது. **தனது குருவின் முயற்சிகள் வீணாகிப்போவதை தன்னால் அனுமதிக்க முடியாத அளவிற்கு, அவற்றை அவர் மதித்துப் போற்றினார். ஆக, தன்மீதே அவர் அதிகபட்சம் கடினமாகப் பணியாற்றினார்.**

அர்ப்பணிப்பும் சரணாகதியும் நிறைந்த அத்தகையதொரு அணுகுமுறையைக் கடைபிடிக்கும்படி, எப்போதாவது லாலாஜி, பாபூஜியிடம் வேண்டிக்கொள்ளவோ அறிவுறுத்தவோ செய்தாரா? தன் குருவிடத்திலான பாபூஜியின் மனோபாவம், அவரது இதயத்திலிருந்தே இயல்பாக எழுந்தது. பிறகு, அவரே மாஸ்டர் எனும் நிலையில், எவரிடமிருந்தும் தனிப்பட்ட விதத்திலான பக்தி, அர்ப்பணிப்பு அல்லது சரணாகதியை வேண்டிக் கேட்டுக்கொள்ள முடியாத அளவு பாபூஜியின் இயல்பு நீடித்தது. அதன் விளைவாக, துரதிர்ஷ்டவசமாக, அவரது அப்யாசிகள் உண்மையான பாதையை அடிக்கடி தவறவிடுவர்; எனினும், இந்த விஷயத்தில், பாபூஜியால் அவர்களை வழிநடத்த முடியவில்லை. அவரது மாசற்ற நன்னடத்தை மற்றும் முழுமையான பணிவு ஆகியவற்றால் அவரது கரங்கள் கட்டப்பட்டிருந்தன; அது, இந்த விஷயத்தை நேரடியாகக் குறிப்பிடுவதற்கு அவரை அனுமதிக்கவில்லை. மாறாக, “மையம்”, “மெய்ம்மையுணர்தல்” அல்லது “இறைவனுடன் முழுமையாக ஒன்றிணைதல்” போன்ற மறைபொருளான

மற்றும் மறைமுகமான வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தி, அவர் லட்சியத்தை வரையறை செய்ய நேர்ந்தது.

அப்யாசிக்கான அவரது கடிதங்கள் ஒன்றில், பாபூஜி அவர்கள், ஒரு அப்யாசியானவர் எவ்விதம் மனோரீதியில் நிரந்தரமாகத் தனது மாஸ்டருடன் தொடர்பில் நீடித்திருக்க வேண்டும் எனவும், நிலையான நினைவின் முக்கியத்துவம் பற்றியும் எழுதியிருந்தார். பாபூஜி, கூச்ச சுபாவம் கொண்டிருந்த காரணத்தினால், அப்யாசியிடம், “எல்லா நேரமும் உங்களை நான் நினைத்துக் கொண்டிருப்பதாக எண்ணுங்கள்” என்று ஒருவேளை சொல்லியிருக்கலாம். உளவியல்ரீதியாக வேறு வகையான ஒரு விதத்தில் சொல்லப் பட்டிருந்தபோதிலும், அதே நோக்கத்தை அது நிறைவேற்றுகிறது. “என்னை உங்களது லட்சியமாகக் கொள்ளுங்கள்” என்பது போன்ற எதையும் அவரால் ஒருபோதும் கூற முடிந்ததில்லை. தனது இதயத்தில், தனது இருப்பையே கூட அவர் உணர்ந்திராத நிலையில், அவரால் எப்படி அவ்வாறு கூற முடியும்? இருந்தபோதிலும், மிஷனின் பிரார்த்தனையிலுள்ள வார்த்தைப் பிரயோகம் தெள்ளத் தெளிவாக உள்ளது:

> ஓ மாஸ்டர், மனித வாழ்வின் உண்மை லட்சியம் நீரே.
>
> நாங்கள் இன்னும் ஆசைகளுக்கு அடிமைகளாய் இருப்பது, எங்கள் முன்னேற்றத்தை பாதிக்கிறது.
>
> எங்களை அந்நிலைக்கு இட்டுச் செல்லும் ஒரே தெய்வமும் சக்தியும் நீரே.

இந்த வரிகள் பாபூஜியிடமிருந்து எழவில்லை; அவை, சுவாமி விவேகானந்தரால் கூறப்பட்டு, பாபூஜியால் பெறப்பட்டவையாகும்; உயர் சக்திகளின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து, அவற்றை அவர் எழுதி, பின்னர் வெளியிட்டார். இந்த பிரார்த்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த மாஸ்டர் என்பவர் யார் என்று சில நேரங்களில் பாபூஜியிடம் மக்கள் கேட்பது வழக்கம். “கடவுளே உண்மையான மாஸ்டர்” என்பது பாபூஜியின் உடனடி பதிலாக இருந்தது. ஆனால், இந்த பிரார்த்தனை கடவுளை நோக்கிக் கூறப்பட்டது எனில், “எங்களை அந்நிலைக்கு இட்டுச் செல்லும் ஒரே தெய்வமும் சக்தியும் நீரே” என்ற வாக்கியம் ஏன் திரும்பக் கூறப்பட வேண்டும்? இந்த விவாதம் ஆழ்ந்து சிந்திப்பதற்கு உகந்தது; ஒவ்வொருவரும் தங்களது முடிவை தாங்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

மாஸ்டரை ஒருவரது லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்பதன் அர்த்தம் என்ன என்பதை பிரார்த்தனையின் முதல் வரி குறிப்பிடவில்லை. இந்தக் கருத்திலிருந்து நாம் என்ன முடிவிற்கு வரமுடியும்? அவருடன் ஐக்கியம் அடைய நாம் முயற்சிசெய்ய வேண்டும் என்பதை அது குறிக்கிறதா? அவருடன் எல்லா விதத்திலும் ஒத்த தன்மை படைத்தவராக ஆவதற்கு நாம் அரும்பாடுபட வேண்டுமா? அத்தகைய அணுகுமுறைகள் பிரார்த்தனையின் அர்த்தம் பற்றிய ஒரு தவறான புரிதலாகி, நம்மை மீண்டும் தடம் மாறச் செய்துவிடும். ஐக்கியம் அடைவதை அல்லது எல்லா விதத்திலும் ஒத்த தன்மை படைத்திருப்பதை நாடுவது, அதிக உரிமையுடன் கேட்கும் ஒரு வேண்டுகோளாகும்.



அத்தகையதொரு நிலையை பரிசாக அளிப்பது, சீடருடைய பணி என்பதைவிட, மாஸ்டருடைய பணியாகும். அவ்வாறு இருக்கையில், அது எவ்விதம் என் லட்சியமாக இருக்க முடியும்? அத்தகையதொரு கருத்தை பேணிப் பராமரிப்பது என்பது, குருவின் உணர்வுபூர்வ மனோபாவங்களை எனக்கு சாதகமாக நான் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கும் ஒரு சூழலுக்கு இட்டுச்செல்லும், தன்னையே சீரழித்துக்கொள்ளும், ஒரு உண்மையான செயலாகும்.

**அதற்கும் மேலாக, ஐக்கியம் அடையும் நிலைக்கான எனது ஆசை, எப்பொழுதேனும் அதை நான் அடைவதிலிருந்து என்னைத் தடுத்துவிடும்; ஏனெனில், இந்த ஆசையின் அடித்தளமாக இருக்கும் "நான்" எனும் தன்மையை அது வலுப்படுத்த மட்டுமே செய்யும்.** அதே நேரம், லட்சியத்திற்கான தீவிர ஏக்கத்தையும் தவிப்பையும் வளர்த்துக்கொள்வதை பாபூஜி வலுவாகப் பரிந்துரைத்ததை நாம் காண்கிறோம். எந்த விதமான ஏக்கத்தைப் பற்றி அவர் பேசிவருகிறார்? ஏக்கத்தில் பல்வேறு நிலைகள் உள்ளன. ஏக்கத்தின் மிகவும் கீழான வகை, அது எவ்வளவு தீவிரமானதாக இருப்பினும், நாம் செல்ல விரும்பும் எந்த இடத்திற்கும் நம்மை அழைத்துச் செல்லப்போவதில்லை. உதாரணமாக, உங்கள் அன்பிற்குரியவர் இல்லாததால் எழுகின்ற ஏக்கம், உங்கள் அன்பிற்குரியவரிடமிருந்து பரிசுகளுக்காக மட்டுமே நீங்கள் ஏங்குகின்ற ஒரு சூழலைவிட முற்றிலும் வேறுபட்டது. உங்களுக்குப் பிரியமானவர் எல்லா நேரமும் உங்களிடமிருந்து எதையாவது பெற முயல்வதில் கவனம் செலுத்துவதாக, சற்றே கற்பனை செய்து பாருங்கள்!

உன்னதமான தவிப்புகள், மாஸ்டரின் பௌதீக பிரசன்னத்திற்கான எந்தவித ஏக்கத்தையும் அனுமதிப்பதில்லை. தனது சகாக்களுள் ஒருவருக்கான கடிதத்தில், "உண்மையாக சொல்வதெனில், மாஸ்டரின் உருவம் என்பது கடவுள் அல்ல, ஆனால் அதன்பின் தெய்வீகம் உள்ளது. ஆகவே அந்த தெய்வீகத்திடம் என்னை சமர்ப்பித்துக்கொண்டேனே அன்றி, அந்த பௌதீக ஜீவனிடம் அல்ல" என்று பாபூஜி எழுதுகிறார். ஆனால், பின்னர் தொடர்ந்து, மாஸ்டரது முழு உருவத்தையும் உங்களது பார்வைக்குள் நீங்கள் வரவேற்கும் பட்சத்தில், தெய்வீகமானது பின்தங்கிவிடும்" என்றும் அவர் கூறுகிறார். இங்கு மாஸ்டரின் பௌதீக தரிசனத்தை நாம் நாடவேண்டும் என்று பாபூஜி பரிந்துரைக்கவும் இல்லை, அவரது சொந்த அணுகுமுறையாக அது ஒருபோதும் இருந்ததும் இல்லை. **தரிசனம் ஒரு உள்ளார்ந்த நிலையில் மட்டுமே நிகழ்கிறது; மேலும், மாஸ்டருடனான ஒரு சந்திப்பு எப்போதும் நிகழக்கூடிய ஒரே நிலை, தியான நிலையாகும்.**

இந்த உணர்வுடன், தனக்கே உரித்தான தியான முறையினை அவர் கடைப்பிடித்தார்; அதை அவருக்கு லாலாஜி ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை (எனினும், அதை மௌனமாக அவர் வியந்து பாராட்டினார்). லாலாஜியின் உருவ அமைப்பின் மீது, அது பரம்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற எண்ணத்துடன், அவர் தன்னியல்பாக தியானத்தைத் தொடங்கினார். அது எனக்கானது மட்டுமே" என்று பின்னாளில் பாபூஜி

சொல்வது வழக்கம். மீண்டும், அவரது நோக்கமானது எந்த விதத்திலும் தனது கருத்துகளை அப்யாசிகளின் மீது திணிப்பதல்ல. எவரொருவரது வாழ்விலும் தனிப்பட்ட விதத்தில் தன்னைப் புகுத்திக்கொள்வது அவரது இயல்பில் இல்லாத விஷயம். ஆகவே, இதுபோன்ற விஷயங்களில், அவரால் நேருக்கு நேராக தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடிந்ததில்லை. அவர் தன்னை நேரடியாக வெளிப்படுத்திக்கொள்வதுகூட பயனற்றதாகவே இருந்திருக்கும்; ஏனெனில், ஒரு சீடரால் பாதையை தானே பார்க்க முடியாத வரை, அத்தகைய வழிகாட்டுதல் எதிர்ப்புகளையே சந்திக்கும்; அதே நேரம், சீடரால் அந்த உண்மையைக் காணமுடியும் பட்சத்தில், அதைச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. மிகவும் புனிதமான அறிவாற்றல் இது போன்றே இருக்கும். அது உள்ளிருந்து இயல்பாகவே வரவேண்டியது அவசியம். முதுரை கூறுவது போன்று, குரங்கிற்கு ஏறுவதற்கு கற்றுக்கொடுக்க யாராலும் முடியாது. அப்யாசம் அல்லது பயிற்சி மட்டுமே எந்தவொரு எதிர்ப்பினையும் உருவாக்காமல், ஒரு இயல்பான விதத்தில், சரியான அணுகுமுறைக்கு நம்மை வழிநடத்த முடியும். அது எதிர்ப்பினை உருவாக்குவதில்லை; ஏனெனில், எந்த வெளிப்புற ஆதாரத்திலிருந்தும் வருவதற்கு பதிலாக, நம்முள் இருந்தே அது வருகிறது. பெரும்பாலும், நாம் ஒப்புக்கொள்ள மறுக்கும் எந்த அறிவாற்றலையும் அது நமக்கு வழங்குவதுகூட இல்லை. மாறாக, சரியான மனோபாவத்தினை அது நம்முள் உருவாக்க மட்டுமே செய்கிறது. நமது உண்மையான நடத்தை (*அக்லாக்*) படிப்படியாக வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டு, பின்னர் நமது மனோபாவம் அந்த ஒளியினைப் பிரதிபலிக்கின்ற காரணத்தினால் இது நிகழ்கிறது.

**பாபூஜியால் நமக்கு வழங்கப்பட்டுள்ள தியானம், சுத்திகரிப்பு மற்றும் பிரார்த்தனை ஆகிய வழிமுறைகள் தனித்துவமானவை. உலகம் முழுவதும் தியானம் பற்றிப் பேசுகின்றபோதிலும், கிட்டத்தட்ட எல்லா வழிமுறைகளுமே ஒரு உண்மையான தியான நிலையை உருவாக்கத் தவறுகின்றன.** மணிக்கணக்கில், நாட்கணக்கில் மற்றும் மாதக்கணக்கில் தியானம் செய்வதன் மூலம் சிலர் திருப்தி அடையலாம். எவ்வளவு நேரம் தங்களால் அமர்ந்திருக்க முடியும், எவ்வளவு நேரம் தங்களால் விரதம் இருக்க முடியும் அல்லது எவ்வளவு நேரம் தங்களால் தனிமையில் இருக்க முடியும் என்பது பற்றி அவர்கள் தாங்களே பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடும். இருப்பினும், விவரிக்க முடியாத, உண்மையான, விசேஷ தியான நிலைகள் அவர்களது அணுகுதலுக்கு அப்பாற்பட்டு உள்ளன.

மீண்டும் மீண்டும் யோகப் பிராணாஹுதியைப் பெறுவதன் மூலம், கிட்டத்தட்ட உடனடியாக இந்த நிலைகளுக்குள் நாம் செல்லும்படி செய்யப்படுகிறோம். இதுவே உலகிற்கான பாபூஜியின் பரிசாகும்; இதுபற்றி மக்கள் விழிப்புணர்வு பெற நாங்கள் விரும்புகிறோம்.

தியான நிலையில் நாம் ஆழமாக ஈர்த்துக்கொள்ளப்பட்டு, உள்முகமாக மையப்படுத்தப்படுகிறோம். இந்த மையப்படுத்தப்பட்ட தன்மையை மிக கவனத்துடன்

நாம் பராமரிப்போமெனில், இதனால் விளைகின்ற லயித்துப்போகும் தன்மை நமது அன்றாட நடவடிக்கைகளில் பிரதிபலிக்கும் விதத்தில், அந்த அளவு நமக்குள்ளேயே மையப்படுத்தப்பட்டவர்களாக நாம் ஆகிறோம். இந்த **நிரந்தர மையப்படுத்தப்பட்ட தன்மைக்கான மற்றொரு பெயர், "நிலையான நினைவு"** என்பதாகும் - குறிப்பாக அத்தகையதொரு லயித்துப்போகும் நிலையைப் பரிசளித்த ஒருவரிடம் நாம் நன்றியுணர்வுடன் இருக்கும்போது இந்த நன்றியுணர்வில் நாம் அப்படியே உருகிக் கரைந்து போகிறோம்.

நம் மகோன்னத மாஸ்டருடனான நமது ஒத்ததிர்வு இப்போது தொடங்குகிறது. தியானம் மட்டுமே இதனை உருவாக்க முடியாது. சுத்திகரிப்பு இல்லாமல், பதிவுகளும் ஆசைகளும் இதயத்திலேயே தங்கி, நமது கவனத்தை வெளிப்புறமாக இழுத்து, உள்முகமாகக் குதித்து மூழ்குவதிலிருந்து நம்மைத் தடுத்து நிறுத்துகின்ற ஊடுருவ முடியாத ஒரு கடினமான உறையாக ஆகிவிடக்கூடும்.

**நம்மில் பலரும் சுத்திகரிப்பை சம்ஸ்காரங்கள் அல்லது பதிவுகளை நீக்குகின்ற ஒரு பயிற்சிமுறையாகப் புரிந்துகொள்கிறோம் என்ற போதிலும், சம்ஸ்காரங்கள் இவ்விதம் அகற்றப்படுவதால் என்ன விளைகிறது? சம்ஸ்காரங்கள் அகற்றப்படுவதால் உருவாகின்ற வெற்றிடமானது நமக்கு பரிசாகக் கிடைக்கிறது. அதன் பின்னர், ஒன்றுமில்லாத்தன்மை என்னும் ஒரு திரையினால் நமது புதிய தனிமனிதப் பண்பினை நாம் வடிவமைக்கையில், மென்மேலும் மென்மையான நிலைகளை நாம் வெளிப்படுத்தத் தொடங்குகிறோம். இந்தப் புதிய நிலையே, "தேவைகள் குறைவது அதிகரித்துகொண்டே போகும்"** (more and more of less and less) **என்பதன் சாராம்சம் ஆகும். "ஒன்றுமில்லாத்தன்மை"** (nothingness) **எனும் இந்த சொல்லை,** "no - **இல்லை" என்றும்,** "thingness - **ஏதோவொன்றாக இருப்பது" என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கும்போது, இன்னும் மேலான விதத்தில் புரிந்துகொள்ளப்பட முடியும். எந்த விஷயத்திற்குமான ஆசை அங்கு மீதம் இருப்பதில்லை. எந்த விஷயமும் உங்களது மையப்படுத்தப்பட்ட தியான நிலைக்கு வெளியே உங்களை இழுக்க முடியாது. இது நிச்சயமாக, மிகச் சிறந்த விதத்தில், நாம் நிகழ்த்தப்போகும் சிறந்த உலகாயத செயல்பாடுகளை விட்டுவிடுவதற்கு காரணமாக இருக்கப்போவதில்லை.**

சுத்திகரிப்பு இல்லாத தியானம் போதுமானதாக இருப்பதில்லை என்பது போலவே, தியானம் இல்லாத சுத்திகரிப்பும் அதற்கே உரித்தான விளைவுகளைக் கொண்டிருக்கும். தியானத்தினால் உருவாக்கப்படும் லயித்திடும் தன்மை இல்லாமல், சுத்திகரிப்பினால் விளைகின்ற உள்முக வெற்றிடமானது, பதிவுகள் என்று பொருள்படுகின்ற விஷயங்களை மென்மேலும் ஈர்த்துக்கொள்ள மட்டுமே செய்யும்; இந்தப் பதிவுகள் எதிர்கால ஆசைகளுக்கான விதைகளாக ஆகின்றன. ஒரு தனிப்பட்ட மட்டத்தில் நிறைவேற்றப் படுவதற்கான சுயநலமான நோக்கங்களைக் கொண்டிராத, ஒன்றுமில்லாத்தன்மை

என்னும் எளிய திரையினை ஆடையாக அணிந்திருக்கும் அத்தகையதொரு மாஸ்டரிடம் லயிப்புத்தன்மை இருக்கும் வரையில், வெற்றிடமானது பயன் தரத்தக்கதாக மட்டுமே நீடித்திருக்க முடியும்.

**இந்த வெற்றிடம் அல்லது ஒன்றுமில்லாத்தன்மை எனும் நிலை, "நான்" என்பது முழுவதும் இல்லாத நிலையில் முடிவடைகிறது. அங்கு, இனியும் உங்களுக்காக, நீங்கள் இருப்பதில்லை.** இதுவே சரணாகதியாகும். சரணாகதி என்னும் அத்தகையதொரு அழகிய நிலைக்கு மிகவும் நெருங்கிய விஷயம் சரணடைதல் ஆகும். சரணடைதல் என்பதை தோல்வி அடைவதுடன் எப்போதும் நாம் தொடர்புபடுத்துகின்ற காரணத்தினால், ஆன்மீகக் களத்தின் ஆரம்ப கட்டத்தில் இருக்கும் ஒருவருக்கு சரணடைதல் எனும் செயல்பாடு பெரும்பாலும் கலக்கத்தை ஏற்படுத்துகிறது. சரணாகதி என்பதை நாம் தோல்வியுடன் தொடர்புபடுத்துகிறோம். சரணாகதி என்பது தோல்வியல்ல. **எனக்கு மிகவும் பிரியமான அன்னையின் பாதுகாப்பின் கீழ் நான் இருக்கிறேன் எனும் உணர்வு மகிழ்ச்சியை மட்டுமே கொண்டுவருகிறது. சரணாகதி எனும் நிலையை அடையும்போது ஒரு பக்தன் மகிழ்ந்து அனுபவிப்பது அத்தகையதொரு உள்நிலையே ஆகும்.**

"இறக்கும் முன்னர் இறந்துவிடுவதே சுதந்திரத்திற்கான வழி" என்று பாபூஜி கூறியுள்ளார். அதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் எதையும் இழந்துவிடவில்லை. உண்மையில், ஒரு பக்தனுக்கான மிக மகோன்னதமான அருளாசியை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்; அது குருவின் இதயமே ஆகும். அதையும் தாண்டி, பெறுவதற்கு தகுதியான ஒன்று எதுவும் இல்லை. இப்போது குரு, சீடர் இருவரும் ஒருவர் மற்றவரது நினைவில் நீடித்திருக்கின்றனர். குருவின் திருவடிகளில் சீடர் சரணாகதி அடைந்துள்ளார். அதே நேரம், தனது சீடரின் திருவடிகளில் குரு சரணாகதி அடைந்துள்ளார். அது பரஸ்பரமானது.

சரணாகதி உண்மையானதாக இருத்தல் வேண்டும். அது உங்களது *அக்லாக்* அதாவது உங்களது உண்மையான சுபாவமாக, உங்களது சாராம்சமாகவே இருக்க வேண்டியது அவசியம். அது செயற்கையானதாக இருக்கும் பட்சத்தில், அப்போது உங்கள் "சரணாகதி" உள்நோக்கங்கள் கொண்டிருக்கும் காரணத்தினால், மாஸ்டர் உங்களிடமிருந்து விலகி ஓடுவதை நீங்கள் காணக்கூடும். முக்தியையோ அல்லது மைய மண்டலத்தினுள் அனுமதிக்கப்படுவதையோ நீங்கள் துரத்திச் செல்லும்போது, அவற்றை அகற்றுவதற்கான பிரார்த்தனைகளுடன் நீங்கள் அவரை அணுகாதவரை அத்தகைய ஆசைகளுடன் செல்வதற்கு பதிலாக குருவை அணுகாமல் இருப்பதே மேலானதாக இருக்கக்கூடும். நிச்சயமாக, குருவானவர் முக்தி அல்லது மைய மண்டலத்தினை நமக்கு மறுக்க விரும்புவதில்லை. மாறாக, அவரால் சாதிக்க முடிந்திருப்பதைவிட இன்னும் மகத்தான உயரங்களுக்கு நாம் உயர்ந்தெழுவதை அவர் விரும்புகிறார். **இருப்பினும், நல்லது அனைத்தும் இந்த உறவுமுறையின் தூய்மையிலிருந்து வருகிறது; இந்த உறவுமுறையின் தூய்மையை, மற்ற எந்த லட்சியத்தையும் விட அதிகமாக நாம் பராமரிக்க வேண்டும்.**



லட்சியங்களை அடைவதற்கான மனிதர்களின் விருப்பங்களினால், அடிக்கடி பாபூஜி கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுவது வழக்கம். தானாகவே மைய மண்டலத்தை அடைந்திருக்க முடியாத ஏராளமானவர்களை, மிகுந்த சாதுர்யத்துடன் அவர் மைய மண்டலத்தில் அமர்த்தினார். வருந்தத்தக்க விதத்தில், அதன் விளைவுகள் நிரந்தரமற்றதாக இருந்தன. அந்தப் பரிமாணத்தின் தனித்துவமான சூட்சுமத்தன்மையுடன் அவர்களால் ஒத்ததிர முடியாத காரணத்தினால், அவர்களால் நீண்ட காலம் அங்கு நீடித்து இருக்க முடியவில்லை. அதன் விளைவாக, அவர்கள் வீழ்ச்சியை சந்தித்தனர். மைய மண்டலத்தை சென்றடைந்துவிட்டதாக அறியப்படுபவர்கள் சறுக்கிவிழத் தொடங்கியபோது, அவருடைய மகத்துவத்திற்கும், பாதைக்கும் ஓர் அவப்பெயரை அவர்கள் கொண்டு வந்தனர். அத்தகைய நபர்களை இயற்கை மன்னிக்குமா? பாபூஜியின் காலத்தில், பயிற்சியும் செய்துகொண்டு நிபந்தனையின்றி சேவை புரிந்தவர்கள் அபூர்வமே. அவரது நாட்குறிப்புகளில், இதுபற்றி லாலாஜி கருத்துத் தெரிவிக்கும் பின்வரும் சம்பவங்களை நாம் காண்கிறோம்:

**ஆகஸ்ட் 18, 1944:**

**மதிப்பிற்குரிய லாலாஜி:** “தன்னை பக்தனாகவும் அவரை பக்திக்கான இலக்காகவும் கருதுவது மானுடப் பண்பாடாகும். இந்த நிலையினை மறந்து, மனிதர்கள் இறைவனை தங்களது நலன்களுக்கு சேவை புரிவதற்கான ஒரு கருவியாக நடத்துகின்றனர். தெய்வங்கள் மற்றும் குருவின் விஷயத்திலும் இது பொருந்துகிறது.”

**ஆகஸ்ட் 23 1944:**

**மதிப்பிற்குரிய லாலாஜி**: “சுயநல நோக்கம் இல்லாதவர்களாகவும், உங்களிடம் சரணடைபவர்களாகவும் இருப்பவர்கள் மிகவும் குறைவு.”

உலகாயத ஆதாயங்களுக்கான அல்லது ஆன்மீக முன்னேற்றத்திற்கான நோக்கங்களுக்கு இடமளித்த வண்ணம் பயிற்சி செய்வது, ஆரம்ப கட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றபோதிலும், வெகு விரைவிலேயே அத்தகைய அனைத்து கருத்துகளிலிருந்தும் நம்மை விடுவித்துக்கொண்டு, உண்மையான அப்யாசிகளாக ஆவதற்கு, நாம் வேதனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். *அப்யாஸ்* என்பது பயிற்சியையே குறிக்கிறது.

இருப்பினும், இது சாதனாவிலிருந்து வேறுபட்டது; *சாதனா* என்பது, சாதகர் சாதிக்க விரும்புகின்ற பிறவாநிலை, அல்லது வேறு ஏதாவது உள்முகநிலை, அல்லது சாதிக்கப்படக்கூடிய விஷயம், அல்லது லட்சியம் போன்று, மனதில் ஒரு குறிப்பிட்ட இலக்குடன் பயிற்சி செய்வதாகும். சாதனாவிற்கு மாறாக, *அப்யாஸ்* என்பது குறிப்பிட்ட எல்லைகளற்ற ஒன்றாகும். ஆசைகளற்ற செயல்பாடு (*நிஷ்காம் கர்மா*) எனும் உணர்வில்,

நமது பயிற்சியின் பலன்களை மாஸ்டரின் தீர்ப்பிற்கு நாம் சமர்ப்பிக்கிறோம். ஆக, நம்மை அப்யாசிகளாக வரையறை செய்வது சரணாகதி நிலையே. கீதையில் கூறப்படும் கர்மாவின் கோட்பாடு, இவ்வாறாக ஆன்மீக ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்திற்கும் பொருந்துகிறது. சரணாகதி இன்றி, நாம் சாதகர்கள் மட்டுமே; மேலும், எந்த ஒரு நிலையையோ அல்லது உள்முக நிலையையோ அடைவது என்பது வலுவற்றதாகிறது.

சகஜ மார்க்கம் பற்றிய ஒரு அழகான விஷயம் என்னவெனில், என் மனதிலோ இதயத்திலோ கேட்பதற்கு எதுவும் இல்லாதபோது, அதனால் விளைகின்ற வெற்றிடம் தன்னியல்பாக இறையருளை ஈர்க்கிறது. அதன் பின்னர், அவர் இறங்கிவந்து நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்கின்றார். நாம் அதிகம் ஆசையற்றவர்களாகும்போது அவர் நமக்கு அதிகமாக உதவி புரிகிறார். பஞ்ச பூதங்களையும் (ஐந்து மூலக்கூறுகளையும்) தாண்டி பிண்டப்பிரதேசத்தை நாம் கடந்து செல்கையில், பிறவா நிலையானது உறுதிசெய்யப்பட்ட விஷயம் என்பதாக மீண்டும் மீண்டும் நாம் கேள்விப்பட்டிருந்தபோதிலும், பிறவாநிலை என்பது அந்த ஐந்து சக்கரங்களைக் கடந்து செல்கின்ற ஒரு விஷயம் மட்டுமே அல்ல. மாறாக, அந்த சக்கரங்கள் ஒவ்வொன்றிலும் நாம் வெற்றிடமாக ஆக்கப்படுவதே அர்த்தம் பொதிந்த விஷயமாகும். சுத்திகரிப்பின் மூலமும் சரியான வாழ்க்கைப்பாணியின் மூலமும் சக்கரங்கள் மென்மேலும் தூய்மைப்படுத்தப்படும்போது, நாம் முதல் சக்கரத்தில் இருந்தபோதிலும், அகங்காரமின்மையும் திருப்தியும் மேலோங்கி இருக்கவேண்டியது அவசியம். நமது அகங்காரத்தை புனிதப்படுத்தத் தொடங்குவதற்கு, ஒன்பதாவது அல்லது பத்தாவது சக்கரத்தை அடையும் வரை காத்திருக்கக்கூடிய நிலையில் நாம் உள்ளோமா? உங்களது வாழ்நாளில் ஒருபோதும் நீங்கள் பளுவே தூக்கியிராதபோது, ஒரு உடற்பயிற்சிக் கூடத்திற்குச் சென்று 100 கிலோ பளுவை நீங்கள் தூக்க முயற்சிப்பது போலாகும் அது. ஒவ்வொரு முறையும் படிப்படியாக சாத்தியமான அளவு நாம் பளுவினை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். அப்யாசிகளான முதல் நாளிலிருந்தே இந்த வெற்றிடத்தை நாம் உருவாக்கத் தொடங்க வேண்டியது அவசியம் என்பதை இது குறிக்கிறது. உங்களது யாத்திரையின் எந்த கட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது பொருட்டல்ல; உண்மையில் அகங்காரமின்மையே ஒரு நல்ல உள்முகநிலையை வரையறை செய்கிறது. **ஒரு நல்ல உள்நிலை என்பது, எந்த விதத்திலும் உங்களை முன்னிலைப்படுத்திக்கொள்ளாமல், ஏற்புத்தன்மை உடையவராக மட்டுமே இருப்பதாகும்.** இது வெறும் ஒரு சாட்சியாக இருப்பது மட்டுமே; இந்த நிலையில், நம்மிடமிருந்து எந்தக் குறுக்கீடும் இல்லாமல், அவரது விருப்பம் நிறைவேறுவதை நாம் அனுமதிக்கிறோம்.

ராதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றிய ஒரு அழகிய கதை உண்டு. பகவான் கிருஷ்ணர் தன் உதடுகளில் வைத்துக்கொள்ளும் புல்லாங்குழலின் மீது ராதா பொறாமை கொள்கிறாள். ஒரு நாள் அந்த புல்லாங்குழலை உடைப்பதற்கு அவள் முயற்சி செய்கிறாள். அப்போது, “நீ புல்லாங்குழலினுள் ஒரு முறை பார்த்து, அதில் பொறாமைப்படுவதற்கு என்ன



இருக்கிறது என்று என்னிடம் கூறக்கூடாதா?” என்று ஸ்ரீகிருஷ்ணர் கேட்கிறார். ராதா அதனுள் பார்த்துவிட்டு, “இந்த புல்லாங்குழலினுள் ஒன்றுமில்லை” என்று கூறுகிறாள். பகவான் புன்னகைத்துவிட்டு, புல்லாங்குழலினுள் உள்ள ஒன்றுமில்லாத்தன்மை என்ற இந்தக் காரணத்தினாலேயே, இனிய இசை பிரவாகமெடுக்கிறது என்று அவளிடம் கூறுகிறார். அதனுள் ஒரு தலைமுடி இருந்திருந்தால் கூட, அது இசையை அபஸ்வரம் ஆக்கியிருக்கும். அதன் இனிமை பாழ்படுத்தப்பட்டிருக்கும்.

ஸ்ரீகிருஷ்ணரின் புல்லாங்குழலைப் போல அந்த அளவு நாம் வெறுமையாக ஆகும்போது, நமது வாழ்க்கை எந்த அளவு இனிமையானதாக ஆகக்கூடும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். சேவை மற்றும் பக்திக்கான முன்தேவை முழுமையான வெறுமை மட்டுமே. புல்லாங்குழல் இசையைத் தீர்மானிப்பதில்லை. வேறொரு ராகத்தை இசைத்திருப்பேன் என்பதாக அது குறை சொல்ல முடியாது. இசையைத் தீர்மானிப்பவர் மாஸ்டரே. அவரது கருவியிலிருந்து எந்த விதமான சேவை தேவைப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பவர் அவரே.

**ஒரு கருவி எப்பொழுதேனும் உண்மையில் சேவை புரிய முடியுமா? எந்த புல்லாங்குழலும் தானாகவே இசைக்க முடியாது. அது தயாராக உள்ளது என்னும் இசைக்கப்படுவதற்கான அதன் ஏற்புத்தன்மையைத் தவிர வேறு எதையும் அதனால் வழங்க முடியாது.** இந்தத் தயார் நிலை பல்வேறு வடிவங்களை எடுக்கிறது. நாம் எதுவும் செய்யாமல், குரு தானாகவே வந்து நமக்கு அறிவுரை வழங்குவார் என்று காத்திருக்க மட்டுமே செய்கிறோம் என்பது அதன் அர்த்தமல்லை. அதற்குப் பதில், நம் இதயங்களுக்குள் வந்து இறங்கும் சூட்சுமமான அகத்தூண்டுதல்களை வெளிப்படையாக, வெறுமையாக ஏற்றுக்கொள்பவர்களாக நாம் இருக்கிறோம் என்பதே அதன் அர்த்தமாகும். இவை எங்களது அறிவுரைகள்; தனிப்பட்ட விதத்தில் குருவின் மூலமாக எப்போதாவது அவை வரக்கூடும். மற்ற நேரங்களில் குறிப்புகளும் சமிக்ஞைகளும் நம்மைச் சுற்றித் தோன்றுகின்றன. பெரும்பாலும் அவை உள்ளிருந்து வெளிப்படுகின்றன. இந்த எல்லா சந்தர்ப்பங்களிலும், அவை உள்ளிருந்து வந்தாலும், அவ்வாறு இல்லாவிடினும், இந்த சமிக்ஞைகள், குறிப்புகள் மற்றும் அகத்தூண்டுதல்களில் மாஸ்டரின் முத்திரையை அடையாளம் காண்பது இதயமே. நம்முள் ஒன்றுமில்லாத்தன்மை என்னும் ஒரு நிலையை உருவாக்குவது மட்டுமே நமது வேலை. அதன் பின்னர், நம்மை அவர் பயன்படுத்திக்கொள்கிறாரா இல்லையா என்பது அவரைப் பொறுத்த விஷயம். நம்மை அவர் மேற்கொண்டு அழைத்துச் செல்கிறாரா இல்லையா என்பது அவரைப் பொறுத்த விஷயம். என் இதயத்தைப் பொறுத்தவரை, மிக உயர்ந்த லட்சியமானது, மாஸ்டர் என்னால் மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதே. அதுவே அனைத்திற்குமான முடிவாகும்.

உங்களால் மகிழ்ச்சி அடைவதற்கு, உங்கள் பெயர், முகம், அல்லது உங்கள் உள்நிலை கூட மாஸ்டருக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு அவருக்குத்

தெரிந்திருந்தால், இந்த அமைப்புமுறை செயல்திறன் மிக்கதாக இருந்திருக்காது. *மான்ஹட்* என்ற இடத்திலிருந்து *ப்ரூக்ளின்* என்ற இடத்திற்கு, சிட்டிங்குகள் வழங்குவதற்காக ஒரு நாள் நீங்கள் பயணிக்கக்கூடும்; அப்போது தானாகவே அவரது அருளும் பிராணாஹுதியும் கீழிறங்கிவரத் தொடங்குகின்றன. அந்தத் தருணம் நீங்கள் நன்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணர்வுபூர்வமாக அவர் அறியாதிருக்கலாம். உங்களைப் பற்றிய எண்ணம் அவர் மனதில் உதிக்காமல் போகலாம். இருப்பினும், உங்களால் அவர் மகிழ்ச்சி அடைகிறார்; உங்கள் உள்நிலையின் மாற்றமே அதற்கான நிரூபணமாகும். முன்னிலைப்படுத்திக் கொள்ளாதிருப்பது என்பது, நம் சக மனிதர்களுக்கு நம்மை வெளிக்காட்டிக் கொள்ளாதிருப்பது என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுவது மட்டுமே அல்ல. மிகையாகக் கூறினால் மாஸ்டரிடம் நம்மை வெளிக்காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இல்லை என்றும் பொருள்படுகிறது. அவரைக் கவர்வதற்கான விருப்பம் ஏதும் நமக்கு இல்லை. **முன்னிலைப்படுத்திக் கொள்ளாதிருப்பதில் திருப்தி அடைவதென்பது, பற்றுறுதியின் ஓர் அடையாளமாகும்; அந்த பற்றுறுதி, அவரது அங்கீகாரத்தையோ அல்லது வெகுமதியையோ பெறுவதன் பொருட்டு, எதையும் நாம் நிரூபிக்க வேண்டிய தேவையில்லை எனும்போது வருகிறது.**

நமது மிஷனின் பிரார்த்தனையில், பிரார்த்தனையின் நமது புரிதல் மற்றும் பிரார்த்தனை குறித்த மனோபாவம் ஆகியவற்றைப் பொறுத்து, லட்சியம் எனும் முரண்பாடு அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கப்பட்டு, சரிசெய்யப்பட்டுள்ளது. பிரார்த்தனை எல்லையற்ற விஷயங்களைக் கொண்டுள்ளது என்ற போதிலும், நமது லட்சியம் என்ன என்பதை முதல் இரண்டு வரிகள் ஒரே வீச்சில் நமக்கு வெளிப்படுத்துகின்றன என்பது அதை ஒருவிதத்தில் பார்ப்பதாகும். இருப்பினும், அந்த லட்சியத்திற்கான நமது விருப்பமே நமது முன்னேற்றத்திற்கு அல்லது அந்த லட்சியத்தை சாதிப்பதற்கு தடைவிதிக்கிறது:

> ஓ மாஸ்டர், மனித வாழ்வின் உண்மை லட்சியம் நீரே.
>
> நாங்கள் இன்னும் ஆசைகளுக்கு அடிமைகளாய் இருப்பது, எங்கள் முன்னேற்றத்தை பாதிக்கிறது.

இப்போது ஒரு முரண்பாட்டை எதிர்கொண்டிருக்கும் நிலையில், மூன்றாவது வரி இந்த இக்கட்டான நிலையிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது:

> எங்களை அந்நிலைக்கு இட்டுச் செல்லும் ஒரே தெய்வமும் சக்தியும் நீரே.

இந்த வரி என்ன குறிப்பிடுகிறது? *சாதனா* பற்றி மறந்துவிடும்படி ஒருவேளை அது நம்மிடம் கூறுகிறதோ என்னவோ, ஏனெனில் இந்த விளையாட்டில் ஒரே ஒரு பிரதான விளையாட்டு வீரர் மட்டுமே உள்ளார்.



எதையும் சாதிப்பதற்கு முயற்சி செய்யாத, நன்றியுடைய இதயத்திற்கு ஒரு லட்சியமானது என்ன பலன் அளிக்கப்போகிறது? நமது இதயங்களில் இதனை ஏற்றுக்கொள்கையில், அங்கு நன்றியுணர்வு மட்டுமே நீடிக்கிறது.

சுருங்கக் கூறுவதெனில், இந்த தியான அமைப்பு முறையில் நாம் இணையும்போது, சில நேரங்களில் தற்செயலாக அல்லது வேறுபட்ட இலக்குகளுடன், அல்லது சில நேரங்களில் இலக்குகளே இன்றி நாம் தொடங்குகிறோம். மென்மேலும் நாம் தியானம் செய்கையில், எதிர்கொள்ளும் பல்வேறு நிலைகளை நாம் நேசிக்கத் தொடங்குகிறோம். நாம் அவற்றை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் போற்றிப் பாராட்டவும் ஆரம்பிக்கிறோம்; பிறகு உயரிய நிலைகளுக்காக ஏங்கத் தொடங்குகிறோம். ஒரு கட்டத்திற்குப்பின் இதுவும் விடைபெறுகிறது. உணர்வுபூர்வ விழிப்புணர்வு இல்லாமல், நிகழ்ந்துகொண்டிருப்பது பற்றிய சிந்தனையற்று, நம்மில் பலர் உயரிய ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இயங்கத் தொடங்குகிறோம். இறுதியில், "நான் சமுத்திரமாக ஆகிவிட்டேன்" என்று உரிமை கோருகின்ற நீர்த்துளி ஏதும் இல்லாத சமுத்திரத்தில் விழுகின்ற ஒரு நீர்த்துளி போன்று, அப்யாசியானவர் **ஆதிவீட்டிற்கு** வந்து சேருகிறார் - அது சுவர்கள் ஏதுமற்ற ஒரு வீடு. முரண்பாடு வெற்றிகொள்ளப்பட்டுவிட்டது.

சமுத்திரத்தில் விழும் ஒரு நீர்த்துளியை நாம் விவரிக்கும்போது, ஐக்கியம் பற்றிய ஒரு விளக்கத்தை நம்மால் வழங்க முடிகிறது; இருப்பினும், எல்லா விதத்திலும் ஒத்ததன்மை படைத்திருத்தலுடன் தொடர்புடைய எதிர்வரும் நிலைகள் வார்த்தைகளில் விவரிப்பதற்குக் கடினமானவை. நாடுபவர் எவரும், எல்லா விதத்திலும் ஒத்ததன்மை படைத்திருத்தல் என்னும் நிலையை விவரிக்க முடியாது; அது தர்க்கத்திற்கு அப்பாற்பட்டதாய் உள்ளது. அத்தகையதொரு விஷயத்தை குரு மட்டுமே கூற முடியும். 1944 **ஜூலை** 22 அன்று, **"ராம் சந்த்ராவின் நரம்புகளும் நாளங்களும் திறக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த அறுவை சிகிச்சையை நிகழ்த்துபவருக்கு தொலைநோக்குப் பார்வை அருளப்பட்டிருக்குமேயானால், எனது சக்தி முழுவதும் அவருள் வெளிப்படுவதை அவர் காண்பார்"** என்று மதிப்பிற்குரிய லாலாஜி எழுதிக்கொள்ளும்படி பணித்தார். நமது வாழ்வில் அத்தகையதொரு நிலையினை விரைவில் நாம் அடையக்கூடும் என்பதாக மகோன்னத மாஸ்டரிடம் நமது பிரார்த்தனையை சமர்ப்பிப்போமாக.

அன்புடனும் மரியாதையுடனும்,
கம்லேஷ் படேல்
கன்ஹா சாந்திவனம், ஏப்ரல் 30, 2019

ஷாஜஹான்பூரின் பூஜ்ய ஸ்ரீ ராம் சந்த்ர அவர்களின் 120வது பிறந்தநாள் விழாவில் வழங்கப்பட்ட செய்தி